# சிட்னியில் காமன்வெல்த் நாடுகள் ஒத்திகை!

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (17—5—50) வெளியூர் (18—5—50) [இதழ் 254

## தெ. கி. ஆசியாவுக்கு ஒரு 'மார்ஷல் திட்டம்' வேண்டுமாம்

### கம்யூனிஸத்தைத் தடுக்க அமெரிக்காவுக்கு அடிமையாவதா?

### சொல்லச் சொன்னதை அப்படியே கூறுகிறார் 'சர். ஆர்க்காட்'!

"தென்கிழக்கு ஆசியநாடுகளின் வளம்பொருந்திய ரப்பர் தோட்டங்களையும், டின், பெட்ரோலியம் சுரங்கங்களையும் மேல்நாட்டு முதலாளிகள் கைவசப்படுத்திக்கொண்டு சுரண்ட, நாடுகள் ஏழ்மையில் மூழ்கிக்கிடக்கின்றன, எதிர்நோக்காமல் உதவிசெய்ய வாருங்கள்" என்று சிட்னி மாநாட்டில் ஆர்க்காட்டு ராமசாமி முதலியார் அமெரிக்காவைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கிறார். பொருளாதார நிலையை உயர்த்தச் செய்யவேண்டியதொன்றிருக்க, மாற்றி ஆர்க்காட்டார் கூறுவது அவர் முதலாளிகளின் கையாட்களாக ஆட்சி நடத்தும் காங்கிரஸ் சர்க்காரின் பிரதிநிதியாகச் சென்றிருப்பதுதான் என்று உணரவேண்டியிருக்கிறது.

சிட்னி மாநாடு, கொந்தளிப்புக்குள்ளாகியுள்ள தென்கிழக்கு ஆசியா நாடுகளில், செஞ்சீனாவின் வாடை வீசாமல் தடுக்க, ஏகாதிபத்ய நாடுகளாலும், அந்நாடுகளை அண்டிப்பிழைக்கும் நாடுகளாலும் கூட்டப்பட்டதாகும். மன்னனே முதல்வன் என்பதை ஏற்றுக்கொண்டு காமன்வெல்தில் அங்கம்பெற்றுள்ள காரணத்தால் இந்தியாவும், பாகிஸ்தானும் இம்மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்டுள்ளன. இந்தியத் தூதுகோஷ்டிக்குத் தலைவராகச் சென்றவர், வேறு யாருமில்லை ஆர்க்காட்டு ராமசாமி முதலியார்தான்! குறிப்பு கூட வைத்துக்கொள்ளாமல் அழகாகப் பேசினாராம்; அயல்நாட்டினர் திணறிவிட்டார்களாம்; இது ஆர்க்காட்டாருக்குப் புதியதல்ல. அவர் பேசியதின் சுருக்கமாவது:

"உலகின் ஒருபகுதியில் ஏழ்மை, வறுமை ஆகியவற்றால் ஏற்படும் வெறுப்பு, கவலை, மற்றொரு பகுதியில் செல்வத்தில் திளைத்துவாழும் மக்களின் மகிழ்ச்சியை அழித்துவிடும்; தென்கிழக்கு ஆசியா மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த மேல்நாடுகள் முயலவேண்டியது அவசியமாகும்; ஆனால் சமீபத்தில்தான் சுயேச்சையான நாடுகளின் சுதந்திரத்தைப் பறிக்க எவ்வித முயற்சியும் செய்யக் கூடாது."

"இரண்டாவது உலகப் போரால் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்ட கஷ்டத்தைத்தவிர்க்க, அந்நாடுகளுக்கு மார்ஷல் திட்ட உதவி அளிக்கப்பட்டது; ஐரோப்பாவின் பொருளாதாரம் உயர்ந்தால், உலகத்தின் பொருளாதாரமே உயருமென்ற நோக்கத்தோடே அவ்வாறு செய்யப்பட்டது. இது பெருந்தவறாகும். ஒருபகுதியில் ஏழ்மையும், மற்றொரு பகுதியில்பெருவாழ்வும் இருக்கவே முடியாது."

நாடுகளின் பொருளாதார நிலைமையை உயர்த்தினால்தான், மற்ற நாடுகளின் பெருவாழ்வு சீர்கெடாமல் இருக்குமென்று கூறுகிறார் தோழர் ராமசாமி முதலியார். கம்யூனிஸம் பரவுவதை அப்பொழுதுதான் தடுக்கமுடியுமென்பதை அவர் கூறாமல் விளக்குகிறார். ஆசியா நாடுகளுக்கு மார்ஷல் உதவித் திட்டம் ஒன்று தேவை; அது அரசியல் பலாத்காரம் இல்லாமல் கொடுக்கப்பட வேண்டுமென்பது அவர் விருப்பம். அமெரிக்கா ஒருபோதும் அவ்வாறு செய்ய முற்படாது.

பண்டிதநேரு அமெரிக்கா சென்றிருந்தபோது, "பசியால் வாடுகிறோம், நீங்கள் பாழாக்கும் கோதுமையைக் கொடுங்கள்" என்று கேட்டார். "அதற்குப்பதிலாக உங்கள் நாட்டில் வர்த்தகம் செய்யத் தனிச்சலுகைகள் கொடு [illegible] கூறிவிட்டார்கள். இதைத் தோழர் ராமசாமி முதலியார் உணராமல் இருக்க முடியாது. நாம் பேசினால் ஒரு வேளை அமெரிக்கா மயங்கி உதவி செய்ய முன் வந்துவிடுமென்று சர். ஆர்க்காட் கருதுவாரானால், அது ஒரு பகற்கனவாகவே முடியும்.

மார்ஷல் உதவித் திட்டத்தின்படி மேற்கு ஐரோப்பிய நாடுகள் பெறும் உதவி இரண்டாவது போருக்காக அமெரிக்க ஏராளமாக உற்பத்தி செய்துவிட்ட துப்பாக்கிகளும் டாங்கிகளுமே தவிர நாட்டு மக்களின் அன்றாடத் தேவைக்கு உபயோகப்படுத்தக்கூடிய பொருள்கள் அல்ல. மார்ஷல் உதவித் திட்டம் மற்றொரு மாபெரும் போரில் உலகை மூழ்கடிக்க அமெரிக்க முதலாளிகள் கோரிய வழியேயல்லாது, பொருளாதார அபிவிருத்தித் திட்டம் என்று கூறுவது எந்தவகையிலும் பொருந்தாது.

அறிந்துதான் இருக்கிறார் ராமசாமியார். ஏகாதிபத்தியத்தின் கையாளாக நீண்டநாள் இருந்த காரணத்தாலும், இந்தியாவில் ஒரு குட்டி முதலாளியாக இருப்பதோடு, பெரிய முதலாளிகளின் தோழர் என்ற காரணத்தாலும் இன்றுள்ள நிலைமையை அப்படியே மாற்றிக் காட்டுகிறார் ஆர்க்காட்டார். முதலாளிகளின் கையாட்களாக ஆட்சி நடத்தும் காங்கிரஸ் சர்க்காரின் பிரதிநிதியாக அவர்சென்றிருப்பதால், வேறு

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

## அணுகுண்டு தாக்குதலை சமாளிக்கத் திட்டம்

### ஐரோப்பிய நாடுகள் தயாரிக்கின்றன

லண்டன், மே 16—

ஐரோப்பிய நாடுகள் அமைதியே நிலவும் என்று நம்பினாலும், ஒவ்வொன்றும் அணுக்குண்டு தாக்குதல் ஏற்பட்டால் சமாளிக்க முஸ்தீபுகள் செய்துவருகின்றன.

ஸ்வீடனில்:— 12 பேர்களுக்கு ஒருவர் ஸிவில்பாதுகாப்புப்படையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். 100,000 தொண்டர்கள் ஏற்கனவே பயிற்சியளிக்கப் பட்டிருக்கின்றனர். ஒரு அவசர நிலைமை என்று ஏற்பட்டால், ஸ்டாக்ஹோம் ஜனத்தொகையில் 60 சதவிகிதம் பேர், 10நாளில் நாட்டைவிட்டு வெளியேறச் செய்ய திட்டம் போடப்பட்டிருக்கிறது.

பாருங்கற்களினால் அணுகுண்டுத் தாக்குதலிலிருந்து தப்ப, பாதுகாப்புக் குகைகள் கட்டுவதற்காக 15000000 பவுன் செலவிடப் பட்டிருக்கிறது.

டென்மார்க்கில்:— 250000 பேர் பதுங்கிக் கொள்வதற்கேற்ற 5000 குகைகள் ஏற்கனவேயுள்ளது புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஸிவில் பாதுகாப்பு மசோதா சட்டமாகியதும் 4000,000 பேர்களுக்குத் தேவையான பாதுகாப்புக்குகைகள் கட்டப்படும்.

பெல்ஜியம்:— ஸிவில் பாதுகாப்பு திட்டம் ஐரோப்பாவிலேயே மிகவும் விரிவானது. 10 வருஷத்திற்கான பாதுகாப்பு திட்டங்களுக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டுவருகின்றனர்.

ஜெர்மனி:— சென்ற யுத்த இடிபாடுகளை அகற்றுவதே இன்னும் முடியவில்லை என்றாலும், ஹிட்லரின் "பாதாள நகரங்கள்" உடுக்கலையாமல் அப்படியே இருக்கின்றன. அவசர நிலைமை ஏற்பட்டால், மக்களின் பாதுகாப்புக்கு இவை உபயோகிக்கப்படும்.

### ஜெர்மன் கம்யூனிஸ்டு தலைவர்மீது வழக்கு

பெர்லின், மே 16—

மேற்கு ஜெர்மன் கம்யூனிஸ்டுத் தலைவர் கர்ட்முல்லா என்பவர், பெர்லினில் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றும், கிழக்கு ஜெர்மன் பீபிள்ஸ் கோர்ட்டினால் விசாரிக்கப்படுவார் என்றும் தெரியவருகிறது. இவர் ஹனோவரிலிருந்து கடத்திச் செல்லப்பட்டார் என்று ஒரு செய்தி கூறுகிறது. ஜெர்மன் நலன்களைப் பிரிட்டனிடம் காட்டிக்கொடுத்துவிட்டதாக இவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

### தெ. ஆ. கம்யூனிஸ்ட் எதிர்ப்பு மசோதா

கேப்டவுன், மே 16—

கம்யூனிஸ்டுகளை ஒடுக்க தென் ஆப்பிரிக்க சர்க்கார் கொண்டுவந்திருக்கும் மசோதாவில், எதிர்கட்சியின் ஆட்சேபங்களைத்தவிர்க்க திருத்தங்கள் கொண்டுவரவும் அனுமதிக்கப்படும் எனத் தெரிகிறது.

### கப்பல்களில் சாமான் ஏற்றமாட்டோம்

பாரிஸ், மே 19—

இந்தோசீனாவுக்குப் போகும் கப்பல்களில் சாமான்களை ஏற்றமுடியாது என்று மறுத்த, 270 துறைமுகத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதில் புது ஆட்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏடன், மே 16—

ஏடனுக்கருகில் மாலைவனப் பிரதேசத்தில் தங்கப் புதையலை இதாலிய புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கிறார்.

### பிரிட்டனில் ஆசிரியர்கள் ஏற்றுமதி-இறக்குமதி திட்டம்

லண்டன், மே 16—

காமன்வெல்த் நாடுகளிடையே உபாத்தியாயர்கள் பரிவர்த்தனை திட்டம் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் விஸ்தரிக்கப்பட விருப்பது இங்கு வரவேற்கப்படுகிறது.

காமன்வெல்த் நாடுகளிலிருந்து வந்துள்ள உபாத்தியாயர்கள் மாநாட்டில், பிரிட்டிஷ் காமன்வெல்த் உறவு இலாகா உதவிக் காரியதரிசி பாட்ரிக் ஹோல்டன் பேசுகையில் இதை வரவேற்றார்.

இவ்வருஷம் 140 பிரிட்டிஷ் ஆசிரியர்கள் இதர காமன்வெல்த் நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர் என்றும், காமன்வெல்த் நாடுகளுக்கு நம் குழந்தைகள் அனுப்ப முடியாவிட்டாலும் அயல்நாடுகளிலிருந்து உபாத்தியாயர்கள் வருவதை பிரிட்டன் வரவேற்பதாகவும், அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துவதாகவும் தோழர் ஹோல்டன் கூறினார்.

## அரபு லீக் தலைவர்களை கொல்ல திட்டம்

### யூத பயங்கரவாதிகள் பயமுறுத்தல்

கெய்ரோ, மே 16—

அரபு லீக் தலைவர்களைக் கொன்றுவிடுவதாக திட்டம்போடப்பட்டிருக்கிறதென்று, யூத பயங்கர இயக்கத்தினர் வெளியிட்ட துண்டுப்பிரசுர தகவல்களையொட்டி அரபு லீக் தலைவர்களைப்பாதுகாக்க விசேஷஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இத் துண்டுப் பிரசுரங்கள் டெல் அவீவில்வினியோகிக்கப்பட்டதென்று அரபு லீக் காரியதரிசிக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

பெர்னடெட், லார்ட் மோயின் இவர்களை 'தீர்த்துக்கட்டினாற்'போல அரபு லீக் தலைவர்களையும் ஒழித்துவிடுகிறதென்று அத் துண்டுப் பிரசுரங்களில் கூறப்பட்டிருக்கிறதாம்.

டெல் அவீவில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் இஸ்ரேலுக்கு உலகில் எந்த மூலையில், என்ன நடந்தாலும் தெரிந்துவிடும் என்று காணப்படுகிறதாம்.

இஸ்ரேல் சர்க்கார் இத்துண்டுப் பிரசுரங்களைக்கைப்பற்றியிருப்பதுடன் சுவரொட்டிகளையும் அகற்றும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

### அரபுலீகைவிட்டு விலக விரும்பவில்லை

கெய்ரோ, மே 16—

அரபுலீகைவிட்டு வெளியேற ஜார்டன் விரும்பவில்லை என்பதை, அரபுலீக் அரசியல் கமிட்டிக் கூட்டத்திற்கு வந்துள்ள ஜார்டன் கோஷ்டியின் ஆலோசகர் எல். ஸையத்அப்துல் எல்ஷமைலா இன்று குளோப் நிருபரிடம் கூறினார்.

கிழக்குப் பாலஸ்தீனத்தை ஜார்டனுடன் இணைத்து, இத்தகைய பெரும் பிரச்னையைக் கிளப்பிவிடும் என்று எதிர்பார்க்கவில்லை என்றும், மிகவும் நெருக்கடியான இச்சமயத்தில் அரபுநாடுகளிடையே ஒத்துழைப்பு இருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்றும் அவர் கூறினார்.

மாலை மணி

சென்னை 17—5—50 புதன்கிழமை

# பக்தியும்-பைத்தியமும் (1)

பக்தியும்-பைத்தியமும் பல விதங்களிலே ஒற்றுமையுடையனவாகும்!

பக்தியும்-பைத்தியமும் ஒரே மாதிரியாக மனிதனை ஆட்டிப் படைக்கிறது.

பக்தி முதிர்ந்தவனும், பைத்தியம் பிடித்தவனும் தோற்றத்தில், சொல்லில், செயலில் ஒரே விதமாகத்தான் காணப்படுவார்கள்.

"இன்னது செய்கிறோம், இன்னது சொல்கிறோம் என்பது பக்தி முற்றும்போது பக்தர்களுக்கும் தெரிவதில்லை; பைத்தியம் முற்றும்போது பைத்தியக்காரர்களுக்கும் தெரிவதில்லை.

பக்தியும் பைத்தியமும் சில சமயங்களிலே இணைபிரியா நண்பர்களாகவும் ஆகிவிடுவதுண்டு. பக்தியின் முதிர்ச்சி பைத்தியக்காரத்தனத்தைக் கட்டித் தழுவுவதும் இயற்கை. இந்த நாட்டில் தோன்றியதாகக் கூறப்படும் அடியார்களும் ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும் பைத்தியக்காரச் செயல்களைச் செய்திருக்கிறார்களே என்று கேட்டால், அது பக்தி முதிர்ச்சியின் விளைவு என்று விடை பகர்கின்றனர் வைதிகர்கள்!

பக்தியோடு பைத்தியம் அவசியம் இணைந்தே காணப்படுகிறது என்பதை அடியார்களின் சரித்திரம் இனிது எடுத்து விளக்குகிறது. பக்திக்கும் பைத்தியத்திற்கும் அவ்வளவு தொடர்பு உண்டு!

* * *

பக்தி முதிர்ச்சியின் காரணமாகப் பக்தர்களுக்கு இயல்பாகவே இருக்கும் பைத்தியம், கோடை வெப்பத்தால் சிலருக்கு சிலசமயங்களில் தூண்டப்படுவதும் உண்டு.

பக்தி முதிர்ச்சியின்காரணத்தாலோ, அல்லதுகோடைவெப்பம் காரணமாகவோ அல்லது இரண்டும் சேர்ந்ததன் விளைவாலோ, சில 'பக்தசிரோன்மணிகள்' இன்னது சொல்லுகிறோம், இன்னது செய்கிறோம் என்று தெரியாமல், புலம்பல், பிதற்றல் ஆகிய செயல்களைச் செய்துவருகின்றனர்.

இப்படிப்பட்ட 'பக்தசிரோன்மணிகளில்' முக்கியமானவராகவும், முதன்மையானவராகவும் காட்டிக்கொள்வதில் 'பக்தர்' பக்தவத்ஸலனார் பெரிதும் முயற்சிசெய்து வருகிறார்.

மந்திரி பக்தவத்ஸலனார், பக்தியின் முதிர்ச்சியாலோ அல்லது கோடை வெப்பத்தாலோ மிகவும் தாக்கப்பட்டிருக்கிறார்! பரிதாபம்! என்ன என்னமோ கூறுகிறார்! ஏதேதோ புலம்புகிறார்! நாட்டில் பகுத்தறிவுப் பிரசாரம் புரிந்துவருபவர்கள்மீது பாய்கிறார்!

பகுத்தறிவியக்கத்தினர் ஏது செய்கிறார்கள், அவர்களைப் பற்றி என்ன சொல்கிறோம் என்பதைப்பற்றியும், தன்னைத் தானே அறியாமலும், சென்னை ஹிந்த் கலாமந்திரின் சார்பில் நடைபெற்றக் கூட்டத்தில் புலம்பியுள்ளார். பகுத்தறிவியக்கத்தாரைப்பற்றிக்கூறும்போது,

"இவர்கள் பேச்சு பைத்தியக்காரத்தனமாகஇருப்பதால், இதுபற்றி யாரும் கவலைப் படவேண்டியதில்லை. சட்டைசெய்யவும் வேண்டியதில்லை"

என்று கூறியுள்ளார் மந்திரி பக்தர்.

பகுத்தறிவியக்கத்தாரின் பேச்சு, பைத்தியக்காரத்தனமாகப்படுகிறதாம் பக்தவத்ஸலனாருக்கு! பொதுவாகப் பைத்தியக்காரர்கள் தாம் என்னவோ நல்ல நிலையிலிருப்பதுபோலவும், மற்றவர்கள் பைத்தியக்காரர்கள் போலவும் எண்ணும் சுபாவமுடையவர்களாக இருப்பதுஉண்டு அந்த நிலையில் நின்று கூறுகிறார் போலும், பக்தர் பக்தவத்ஸலனார் பகுத்தறிவியக்கத்தாரைப் பார்த்து! ஐயோ, பாவம்! பக்தியின் முதிர்ச்சி அவ்வளவுமுற்றியிருக்கவேண்டியதில்லை, அவருக்கு! என்னமோ முற்றிவிட்டது!

"கவலைப்படவேண்டியதில்லை" "சட்டை செய்யவும் வேண்டியதில்லை" என்று உபதேசம் புரியும் பக்தர் பக்தவத்ஸலனார், கவலைப்படாமலிருந்தாரா? சட்டைசெய்யாமலிருந்தாரா? என்றால், இல்லை. தம்முடைய பேச்சில் முக்கால் பகுதிக்குமேல் பகுத்தறிவியக்கத்தாரைச் சட்டைசெய்தும், அவர்களைப்பற்றிக் கவலைப்பட்டுத்தான் பேசியிருக்கிறார். பேசவேண்டியதெல்லாம்பேசிமுடித்தானபிறகுதான், "கவலைப்படவேண்டியதில்லை" "சட்டைசெய்ய வேண்டியதில்லை" என்று கூறுகிறார். ஒன்றைச் செய்யவேண்டாம் என்று சொல்லிவிட்டு, அதனையே செய்து கொண்டிருப்பவரைப் பற்றிப்பொதுமக்கள், பொதுவாக என்ன கருதுவார்கள்? பைத்தியம் என்றுதானே கருதுவர்!

பகுத்தறிவியக்கத்தாரின் பேச்சு பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதா? அல்லது பக்தவத்ஸலனாரின் பேச்சு பைத்தியக்காரத்தனமாகஇருக்கிறதா? என்பதை, நடுநிலையில் நிற்கும் நேர்மையாளர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும்

பகுத்தறிவாளர்களின்பேச்சு பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது என்பதற்கு ஏதேனும் காரணகாரியங்களோடு கூடிய விளக்கம் உண்டா என்றால், ஏதும் இல்லை! என்றாலும் 'பைத்தியக்காரத்தனம்" என்று கூறுகிறார் அமைச்சர்! பைத்தியக்காரத்தனத்திற்கு எங்கே காரணகாரியவிளக்கம்? ஏன் இல்லை! ஏன் கூற முடியவில்லை? எப்படிக் கூறுவார்! காரணம் இருந்தாலல்லவா அவர் கூறுவதற்கு! பக்தியின் முதிர்ச்சி—பொறுமையின் விளைவு அமைச்சரை அப்படிக் கூற வைக்கிறது!

"இது மூட நம்பிக்கை. அது மூடநம்பிக்கை என மூடநம்பிக்கைபற்றி பேசி வருபவர்கள், அந்த மூடநம்பிக்கையில் மூழ்கியிருக்கிறார்கள். அவர்கள்தான் அந்த மூடநம்பிக்கையில் இருந்து மீள வேண்டும்." என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார் பக்த சிரோன்மணி பக்தவத்ஸலனார் எவ்வளவு அழகான உபதேசம்! ஆகா! இதில் அறிவு எப்படிக் கொழுந்துவிட்டு எரிகிறது தெரியுமா! இதில் அவருக்கு அவரேதான் எடுத்துக் காட்டு!

"இது மூடநம்பிக்கை, அது மூடநம்பிக்கை" என்கிறார்களாம், பகுத்தறிவியக்கத்தினர். "இது" "அது" என்பதற்கு என்ன விளக்கம்? எங்கே விளக்கம்? காரண காரியத்தை விளக்கிக் காட்டாமல், கண்மூடித்தனமாக எதை மூடநம்பிக்கை என்று கூறுகிறார்கள் பகுத்தறிவியக்கத்தார்? ஒன்றைச் சுட்டிக்காட்ட முடியுமா மந்திரியாரால்? பகுத்தறிவியக்கத்தார் தாம் சுட்டிக் காட்டும் மூடநம்பிக்கை, குருட்டுப்பழக்க வழக்கம் ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஏன்? எப்படி? எதற்கு? என்ற கேள்விகளோடு கூடிய காரண காரிய விளக்கம் தந்து வருகின்றனரே யன்றி, விளக்கந்தராமல் எதையும் மூடநம்பிக்கை என்று கூறுவதில்லையே பகுத்தறிவியக்கத்தார் சுட்டிக்காட்டும் மூடநம்பிக்கை ஒன்றைநம்பிக்கைக்குரியதுதான் என்று எதிர்வாதம் புரிந்து காரண காரியத்தோடு விளக்கிக்காட்ட மந்திரியார்எப்பொழுதாவதுமுயன்றாரா? முயன்று அவரால்முடிந்ததா? இனிதான் அவரால் முடியுமா? பகுத்தறிவியக்கத்தார் மூடநம்பிக்கை என்று கூறுகிறார்களென்றால், காரணத்தோடு கூறுகிறார்களேயல்லாமல், காரணமில்லாமல் கூறுவதில்லை. உண்மை அப்படியிருக்க, விளக்கம் ஏதும் தராமல், "இது மூடநம்பிக்கை, அது மூடநம்பிக்கை என்று கூறி மூடநம்பிக்கையில் மூழ்கியிருக்கிறார்கள்" என்று கூறுகிறார் பக்தவத்ஸலனார். இதை, மூடநம்பிக்கையினிடத்து அவர் கொண்டிருக்கும் பக்திமுதிர்ச்சியினால் ஏற்பட்ட பிதற்றல் என்று கூறுவதா? மறுத்துக் கூறும் திறன் அற்றமையால் ஏற்பட்ட புலம்பல் என்று கூறுவதா? என்பதை நேர்மையாளர்கள்சிந்தித்து முடிவுகட்ட வேண்டும்.

பகுத்தறிவியக்கத்தினர்மூடநம்பிக்கையும், மூட பக்தியும், மக்கள் வாழ்வையும், அறிவையும் எவ்வாறு சீரழித்துவருகின்றன என்பதை விளக்கிக் காட்டி, மக்களிடத்தில் தெளிவறிவு உண்டாக்கி வருகிறார்கள், தம் பிரசாரத்தின்மூலம். பிரசாரம் செய்யப்படும் அளவுக்கு நல்ல பலன் கொடுத்து வருகிறது. பகுத்தறிவுப் பிரசாரத்தால்வைதிகக் கோட்டையும், மூடநம்பிக்கையும், மூடபக்தியும் தகர்த்தெறியப்படுவது கண்டு, வைதீகக் கோட்டையின் காவலராகத் தன்னை பாவித்துக்கொள்ளும் பக்தவத்ஸலனார், மிரண்டு; மருட்சியின் காரணமாக ஏதேதோ கூறுகிறார் மூடபக்தி அந்த அளவுக்கு அவரை ஆட்டிப்படைக்கிறது. பக்தியின் முதிர்ச்சி பொருத்தமில்லாதனவற்றையும், பொய்யானவற்றையும், புலம்பச் செய்கிறது.

கடவுள் பக்தியைக் காப்பாற்ற அரும்பாடு படுகிறார். "நல்ல காரியம் எதைச்செய்ய முற்பட்டாலும், அதில் பக்தி, அக்கரை அவசியமானதாகும்" என்று உபதேசம் புரிகிறார் பக்தர் பக்தவத்ஸலனார். கடவுள் பக்தி நாயன்மார்களையும், ஆழ்வார்களையுமே படாதபாடு படுத்தி வைத்திருக்கும்போது, பக்தவத்ஸலனார் போன்ற அடிப்பொடி ஆழ்வார்களை எந்த அளவுக்கு ஆட்டிவைக்கும்!

பக்தவத்ஸலனாரின் பேச்சு, அவருடைய உபதேசம் எல்லாவற்றையும் கூர்ந்து பார்க்கும்போது, பக்தி-பைத்தியம்—பக்தவத்ஸலம் ஆகிய மூன்றையும் ஒன்றையொன்று பிரித்துக் காண முடியாது போலிருக்கிறது!

## தெ. கி. ஆசியாவுக்கு உதவி செய்யப்போகிறார்களாம்

### சிட்னி மாநாட்டில் தோழர் மாக்டனால்டு கூறுகிறார்

ஸிட்னி, மே 16—

தென் கிழக்கு ஆசியாவுக்கு தன்னால் முடிந்த உதவியை எல்லாம் பிரிட்டன் செய்யும் என்று, பொதுவாகபிரிட்டிஷ் குழுத் தலைவர் லார்ட் மாக்டனால்ட் கூறினாரே ஒழிய, என்ன உதவி எவ்வளவு அளிக்கப்படும் என்ற எதையும் 'பிடி' கொடுத்து அவர் பேசவில்லை என்று குளோப் நிருபர் கூறுகிறார்.

சரியான சமயத்தில், இது சம்பந்தமான பிரிட்டிஷ் கொள்கையை அளிப்பதாக அவர் கூறினாராம்.

ஆசிய மக்களின்வாழ்க்கைத் தரம் உயர வேண்டிய உதவிகளைப் பிரிட்டன் செய்யும் என்று மாக்டனால்ட் கூறினார். (குளோப்)

## யூத தாக்குதலை எதிர்க்க முன் ஏற்பாடு

செய்ரோ, மே 16—

நாபுலஸ், ஜெனின், துல்கராம் இம்மூன்றையும் இணைக்கும் முக்கோணப் பிரதேசத்தின் மீது யூதத்தாக்குதல்கள் ஏற்பட்டால், அவைகளை எதிர்க்க படைகளை திரட்டி முன்னெச்சரிக்கையுடனிருக்கும்படி அரபு லீஜியனுக்கு ஜார்டன் பாதுகாப்பு மந்திரி [illegible]

[illegible] கஹமருன பிரதேசத்தில் அரபு கிராமம் ஒன்றின்மீது யூத விமானம் மெஷின்கன் பிரயோகம் செய்து தாக்கியதாக, அம்மான் செய்தி ஒன்று கூறுகிறது.

## மாஸ்கோவில் டிரிகெவ்லி பல நாட்கள் தங்குவார்

லேக்ஸக்ஸஸ், மே 16—

ஐ. நா. காரியதரிசி ஜெனரல் டிரிகெவ்லி பல நாட்கள் மாஸ்கோவில் தங்குவார் என்று, இங்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன. ஸ்டாலினைச் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படும் என்றநம்பிக்கையுடனேயே அவர் தங்கியிருக்கிறார்.

மாஸ்கோவிலுள்ள டிரிகெவ்லிக்கும், லேக்ஸக்ஸஸிலுள்ள ஐ. நா. செக்ரிடேரியட்டிற்கும் டெலிபோன் தொடர்பு இருந்தபோதிலும் இதுவரைச்சாதித்துள்ள காரியம் பற்றி டிரிகெவ்லியினிடமிருந்து எத்தகவலும் கிடைக்கவில்லை. ஸோவியத் யூனியனில் இருப்பதாக சொல்லப்படும் யுத்தக் கைதிகளில், 14000 ஆஸ்திரியக் கைதிகள் விஷயமாக ரஷ்ய சர்க்காருடன் பேசும்படி டிரிகெவ்லிக்கு ஆஸ்திரிய செஞ்சிலுவைச் சங்கத்தினர் தந்தி அடித்திருக்கின்றனர்.

## துருக்கி தேர்தலில் ஆளும் கட்சியினர் தோல்வி

இஸ்தான்புல், மே 15—

கடந்த 27 ஆண்டுகளாக துருக்கியை ஆண்டுவந்த குடியரசுக்கட்சியினர் 402 பதவிகளைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

எதிர்கட்சியாகிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜீலல்பாயர், நேற்று நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் தன்னுடைய கட்சி வெற்றிபெற்றிருப்பதாக அறிவித்தார்.

## அகில இந்திய ஆரிய மாநாடு!

ஜபூல்பூர், மே. 16—

ஜபால்பூரில் மே 24-ம் தேதி இரண்டாவது அகில இந்திய ஆரியன் மாநாடு நடைபெறும். மத்தியப் பிரதேச சட்டசபைத்தலைவர் ஜி. எஸ். குப்தா தலைமைவகிப்பார். நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பிரசாரக் குழுக்களும், எழுத்தாளர்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆரிய சமாஜப்பள்ளிகளைப் பற்றி இம்மாநாட்டில் ஆராயப்படுமாம்.

## தென்னாபிரிகாவிலிருந்து பிரிட்டிஷார் வெளியேற்றம்

கேப்டவுன், மே 16—

தென்னாப்பிரிகாவிலிருந்து ஏராளமான பிரிட்டிஷார் வெளியேறி வருவதால், இவ்வாண்டு அவர்கள் ஜனத்தொகையில் 5000 பேர் குறைவர் என்று கூறப்படுகிறது.

வெள்ளையர்கள் கொண்ட தென்னாப்பிரிக்காவேற்பட வேண்டுமென்று விரும்பும் மலான், இதைத் தடுக்க எதுவும் செய்யவில்லை என்று பிரிடோரியாவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

தென்னாப்பிரிக்காவில்ஜெர்மனியர்கள்குடியேறப்போவதாகக்கூறப்படுகிறது.

# தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

## 18 - 5 - 50

**திருமால்பூர் :**—காஞ்சி. மணிமொழியார், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஏ. எல். சி. சஞ்சீவி.

**திருவாதவூர்:**—எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, கு. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

## 19 - 5 - 50

**காஞ்சிபுரம் :**—என். வி. நடராசன்

## 20—5—50

**அகரம்சேரி :**—இரா. நெடுஞ்செழியன்.

# இனி நடப்பவை

ஆர்க்காடு:—இவ்வூர் தி. மு. மா. கழக ஆலோசனை அவசரக்கூட்டம் 18—5—50 காலை 8 மணிக்கு, புலவர் மணிஎழிலன் இல்லத்தில் நடைபெறும். அதுபோது 21-5-50 ஆர்க்காடு தி. மு. க. கூட்டத்திற்கு வருகிற தோழர் இரா நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுப்பதைப்பற்றி யோசிக்கப்படும். ஆகையால் மாணவர் கழக உறுப்பினர்கள் யாவும் தவறாமல் வரும்படி தோழர் சுப்பிரமணியம் கேட்டுக்கொள்கிறார்.

* * *

திருமால்பூர்:— 18—5—50 வியாழன் அன்று காலை, ஊர்வலமுடன் தோழர் பி. வி. எம். அண்ணாமலையவர்களால் கொடியேற்றுதலும், மாலை 5-30 மணிக்கு தோழர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஏ. எல். சி. சஞ்சீவி ஆகியோர் பேசுவார்கள்.

* * *

சைதாப்பேட்டை :-மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பாக ஓர் சொற்பயிற்சிக் கூட்டம் 19—5—50 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சடையப்பமுதலித் தெருவிலுள்ள 2-வது எண்ணுள்ள இல்லத்தின் மேல்மாடியில் நடைபெறும்.

* * *

திருச்சிராப்பள்ளி :—முத்தமிழ்ச் சங்கம், இயல், இசை, நாடகம், திரைப்படம் திறப்புவிழா, 19 5-50 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் டவுன் ஹாலில் தோழர் கலைமணி, தெ. பொ. மீ. பால்கரன் தொண்டமான். எம். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் க. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ. அவர்கள்-இயல்; கவிஞர் தோழர் கலைவாணன் அவர்கள்—இசை; பேராசிரியர் தோழர் சி. எஸ். கமலபதி எம். ஏ. அவர்கள்—நாடகம்; தோழர் ஏ. என். ... சாமி அவர்கள் பி. ஏ. (ஆனர்ஸ்) திரைப்படம்; ஆகியவை பற்றிப் பேசுவார்கள். தோழர் எம். ஆர் கோவிந்தராஜன் அவர்கள் இன்னிசை பாடுவார்.

* * *

திருவாதவூர் :—திரௌபதையம்மன் கோவில் முன்பு தி. மு. க. பொதுக்கூட்டம் 18 - 5 - 50 வியாழன் மாலை 6-30 மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர் எஸ். முத்து, எம். அய்யாச்சாமி, கு. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

# தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| முன்வரவு | | 2335—8—6 |
| கே. சிராமு, | ஆரணி | 5—0—0 |
| ஜி. ஏழுமலை, | ,, | 2—0—0 |
| எஸ். கோவிந்தசாமி, | ,, | 1—0—0 |
| பி. ஆர். மாபூப், | ,, | 1—0—0 |
| டி. சையத் கௌஸ், | ,, | 1—0—0 |
| சையத் கபூர், | ,, | 0—8—0 |
| பி. ராதாகிருஷ்ணன், | ,, | 0—8—0 |
| ஜி. அரங்கநாதன், | ,, | 1—0—0 |
| ஏ. எஸ். ராமலிங்கம், | ,, | 1—0—0 |
| ஆர். குப்புசாமி, | ,, | 1—0—0 |
| ரத்தினம். | ,, | 1—0—0 |
| ஜி. கோவிந்தசாமி, | ,, | 1—0—0 |
| பி. ராசகோபால், | ,, | 1—0—0 |
| வி. சடகோபு, | ,, | 1—0—0 |
| இ. அப்துல் கரீம், | ,, | 1—0—0 |
| ஏ. பி. வெங்கிடேசன், | ,, | 1—0—0 |
| எஸ். கேசமி, | காஞ்சிபுரம் | 0—8—0 |
| ஏ. பொன்னுசாமி, | கொழப்பலூர் | 1—0—0 |
| ஏ. பெரியதம்பி, | ,, | 1—0—0 |
| கே. ஆர். துரைசாமி, | காமக்கூர் | 1—0—0 |
| ஏ. பி. வேணுகோபால், | சைதாப்பேட்டை | 1—0—0 |
| கண்ணன், | விண்ணமங்கலம் | 1—0—0 |
| ஆர். என். வீரபத்திரன், | ராட்டிணமங்கலம் | 1—0—0 |
| ஆர். என். சக்ரவர்த்தி, | ,, | 1—0—0 |
| கே. லட்சுமணன், | மதுரை | 0—8—0 |
| பி. சுப்பிரமணியன், | ,, | 0—8—0 |
| என். சுப்பிரமணியன், | ,, | 0—8—0 |
| என். சுப்பையா, | ,, | 0—8—0 |
| வி. சுப்பையா, | ,, | 0—8—0 |
| எம். சண்முகம், | ,, | 1—0—0 |
| அ. பாலகிருஷ்ணன், | ,, | 2—0—0 |
| எஸ். ஆர். ஞானம் சாமியார், | தூத்துக்குடி | 1—0—0 |
| கே. பெரியசாமி, | ,, | 1—0—0 |
| திராவிட நாட்டான், | ,, | 1—0—0 |
| சொ. குருசாமி, | ,, | 1—0—0 |
| தா. அன்புடையான், | ,, | 0—8—0 |
| வா. குணசேகரன், | ,, | 0—8—0 |
| நல்வழிஉபகாரி, | ,, | 0—8—0 |
| ஆ. தமிழ்நேசன், | ,, | 0—8—0 |
| எம். ராமசாமி, | ,, | 0—8—0 |
| சி. ச. சு., | ,, | 0—8—0 |
| இ. ஆனந்த செல்வி, | ,, | 0—8—0 |
| கா. சுகந்த புஷ்பம், | ,, | 0—8—0 |
| வீ. வேர்வக்கனி, | இராசபாளையம் | 1—0—0 |
| த. கனகசபாபதி, | ,, | 1—0—0 |
| ஆர். பி. ஆதிநாராயணன், | ,, | 1—0—0 |
| ச. கு. பால்சாமி, | ,, | 1—0—0 |
| ஆ. நாகரத்தினம், | ,, | 1—0—0 |
| மா. கணபதி, | ,, | 1—0—0 |
| ஆ. சொ. சேதுராமலிங்கம், | ,, | 1—0—0 |
| த. இ. மு. சரவணசாமி, | ,, | 1—0—0 |
| சு. கந்தையா, | ,, | 1—0—0 |
| கு. பொன்னையா, | ,, | 1—0—0 |
| ம. பொன்னையா, | ,, | 1—0—0 |
| வ. ப. சீனியப்பன், | ,, | 1—0—0 |
| எம். சின்னத்துரை, | அம்பாலா | 5—0—0 |
| சு. நடராசன், | ஜபல்பூர் | 1—0—0 |
| ச. செல்வராசன், | ,, | 1—0—0 |
| ஆர். பாஸ்கரன், | நயினார் கோயில் | 1—0—0 |
| அ. மங்களநாகலிங்கம், | ,, | 0—8—0 |
| முத்துசொக்கலிங்கம், | கோவை | 1—0—0 |
| எம். குமாரசாமி, | எரைபுத்தூர் | 1—0—0 |
| தி. மு. க.—கம்பம் கிளை | | 10—0—0 |
| ,, —குல்லலக்குண்டு கிளை | | 10—0—0 |
| பி. என். குப்புசாமி, | சண்முகபுரம் | 5—0—0 |
| செ. தி. நடராசன், | சென்னை | 0—8—0 |
| ரா. கிருஷ்ணன், | ,, | 0—8—0 |
| வை. சங்கரன், | புதுவை | 5—0—0 |
| மு. நத்தான், | ,, | 2—0—0 |
| வீ. அரி, | ,, | 2—0—0 |
| நா. பெருமாள், | ,, | 2—0—0 |
| சு. மன்னர்மன்னன், | ,, | 5—0—0 |
| சி. வி. இராசகோபால், எம். சி., | காஞ்சிபுரம் | 10—0—0 |
| | | 2451—0—6 |

# சிட்னியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விதமாகப் பேசமுடியாது! பேசக்கூடாது!!

தென்கிழக்கு ஆசியா நாடுகள் ஏழ்மையில் வாடுவது உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் யார்? வரலாறு கூறுவதென்ன? வளம் பொருந்திய நாடுகள்; வற்றாத ஜீவ நதிகள் பாயும் நாடுகள்; பொன்னும், முத்தும், ரப்பரும், டின்னும், பெட்ரோலியமும் கிடைக்கும் நாடுகள் வறுமையில் வாடுகின்றன! சொந்த நாடுகள் வளப்பமில்லாத காரணத்தால், பொன்னும், பொருளும்தேடி இன்று மாபெரும் சாம்ராஜ்யங்கள் நசிந்தும், நாட்டு மக்கள் நாடோடிகளாக இந்தியாவுக்கும், மலேயாவுக்கும் நாடுகளுக்கும் வந்தார்கள். நாகரிக நாட்டு மக்களிடையே பூசல்விளைவித்து, அவர்களை அடிமைப்படுத்தி நாட்டை இன்றுவரை சுரண்டினார்கள். அந்நாட்டு மக்களின் கல்வியறிவை வளர்க்கச் சிறிதும் முயலவில்லை. சூழ்நிலையின் காரணமாக அவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற வேண்டிவந்தது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன் தென்கிழக்கு ஆசிய நாடுகள் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான இன்று உள்ளன. ஆனால் 50 ஆண்டுகளுக்கு முன் மூடாம்பிக்கையில் மூழ்கிக்கிடந்த ஜப்பான் சுதந்திரமாகவே இருந்த காரணத்தால், உலகப் போர் ஒன்றை நடத்தி மேல்நாடுகளையெல்லாம் திணரவைத்துவிட்டது?

தென்கிழக்கு நாடுகளின் வளம் சொல்லத்தரமன்று. வேறு நாடுகளில் விளையாத ரப்பர், மற்ற நாடுகளில் கிடைக்காத டின் ஏராளமாகக் கிடைக்கிறது. மற்றும் பெட்ரோலியம் உள்ளிட்ட கிடைக்காத பொருள்களே கிடையாது. ஆனால், அவ்வளவு ரப்பர் தோட்டங்களும், டின், பெட்ரோலியம் சுரங்கங்களும் அந்நிய நாட்டு முதலாளிகளின் கையில் சிக்கிக்கொண்டுள்ளன. இந்த முதலாளிகள் வெளியேற்றப்பட்டு முக்கியத் தொழில்களையெல்லாம் தேசிய மயமாக்கி முதலாளி தொழிலாளி பேதத்தை நாட்டில் ஒழித்தால், தென் கிழக்கு ஆசியா அமெரிக்காவைக்கூட அடித்துவிடும்! நாட்டைப் பொருளாதார அடிமைக்குட்படுத்தி மார்ஷல் உதவி வேண்டும், அச்சீசன் உதவி வேண்டும் என்று கூறுவது முதலாளி மனப்பான்மைபடைத்த ஏகாதிபத்திய நாடுகளின் சூழ்ச்சியே தவிரவேறில்லை.

# கணவன்-மனைவி பரிதாப முடிவு!

கல்கத்தா, மே 15—குமார் என். சிங்தேவ் என்பவரும், அவரது மனைவியும் துப்பாக்கிக் குண்டு காயங்களுடன் ஜனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். கணவன் இறந்துவிட்டாரென்றும், மனைவியின் நிலை கவலைக்கிடமாயுள்ளதென்றும் சொல்லப்படுகிறது. இத்தகைய கோர முடிவுக்குக் காரணம் காதல் என்றும் கூறப்படுகிறது.

இவ்விரு காதலரும் சௌரிங்ஹீ மேல் மாடியில் தங்கியிருந்தனர். பிற்பகலில் இவர்கள் தங்கியிருந்த அறையிலிருந்து துப்பாக்கி வேட்டு சத்தம் கிளம்பிற்று. அப்பொழுது அறைக்கதவு சாத்தப்பட்டிருந்தது. துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்ட சில விநாடிகளில் சிங்தேவின் மனைவி மார்பில் குண்டு காயங்களுடன் அறையைவிட்டு வெளியே வந்தாள். அதே நேரத்தில் அவள் கணவன் ... கழுத்தில் மூன்று காயங்கள் காணப்பட்டன. உடனே டாக்டர் வரவழைக்கப்பட்டார். பின்னர் இருவரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

# கென்யாவில் தொழிற்சங்க தலைவர்கள் கைது

நைரோபி, மே 16—கிழக்கு ஆப்பிரிக்கத் தொழிற்சங்கக் காங்கிரஸ் காரியதரிசியும், கம்யூனிஸ்டுமான மக்கான்சிங் என்பவரை கென்யா கைது செய்திருக்கின்றனர். இதே சமயத்தில் தொழிற்சங்கக் காங்கிரஸ் தலைவர் பிரட்ஜுவாவும் கைது செய்யப்பட்டார். இந்த ஸ்தாபனத்தின் காரியாலயங்கள் சோதனையிடப்பட்டன பதிவு செய்ய மறுக்கப்பட்ட ஸ்தாபனங்கள் கலைக்கப்பட வேண்டும் என்ற உத்திரவை மீறி இது கலைக்கப்படாமலிருந்ததினாலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

# போலீஸ் படையிலிருந்து பலர் ஓட்டம்

பெர்லின், மே. 16—கிழக்கு ஜெர்மன் போலீஸ்படையில் சேர்ந்தவர்களில் சென்ற வாரம் சுமார் 100 பேர்கள் அதிவிரைந்து வெளியேறிவிட்டனர். தாங்கள் மற்றொரு ராணுவத்தில் சேர்ந்திருக்கிறோம் என்பதை சேரும்போது உணரவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்.—ஏனோப்

# கீழ்க் கோடியில் பிரிட்டிஷ் விமானப்படை

லண்டன், மே 16—கீழ்க் கோடியிலுள்ள பிரிட்டிஷ் விமானப்படை யூனிட்களில் ஜெட் விமானங்களும் இடம் பெறும் என்று பிரிட்டிஷ் விமான மந்திரி காரியாலயம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

# எஸ். ஐ. ஆர். கடைகளுக்கு தானியம் வழங்கல்

சென்னை, மே. 16—சென்னை ராஜ்யத்தில் கோதுமை ஸ்டாக் குறைந்திருப்பதினால் தென் இந்திய ரயில்வே தானிய கடைகளுக்குச் சப்ளை செய்யவேண்டிய கோதுமை தானிய அளவில் கால் பங்குமட்டும் கொடுத்துவிட்டு மற்ற முக்கால் பங்கை, ஸெமோலினா, மைதா, நவதானியம் முதலியவைகளை ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு அரை அவுன்ஸ் ரேஷன் வீதத்தில் சர்க்கார் சப்ளை செய்து வருகின்றனர்.

மாதத்தின் முன் பகுதியில் கோதுமை நவதானியம் இவைகளை ஒரு நபருக்கு ஒரு தினத்திற்கு ஒரு அவுன்ஸ் வீதமும், மற்ற 15 நாட்களுக்கு மைதா ஸெமோலினா இவைகளைப் பெருக்க ஒரு நாளைக்கு ஒரு அவுன்ஸ் மூலமும் விநியோகம் செய்வதென ரயில்வே அதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றனர்.

ரயில்வே தானியக்கடைகளுக்கு சீக்கிரமேமே மைதாவை சப்ளை செய்யும்படி ரயில்வே அதிகாரிகள் சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். —ஏனோப்

# ★ நாட்டு நடப்பு ★

### ஐக்கிய வைத்திய சங்கம்

கும்பகோணம், மே. 7—

இச்சங்கத்தின் சார்பில் குடந்தை டவுன் ஹாலில் 27—4—50 மாலை செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் தோழர் சக்ரபாணி தலைமை வகிக்க, தோழர் ஜெகன்னாதன் குழந்தை வைத்தியம் என்பது பற்றியும், தோழர் ராஜகிரி, முகம்மது ஷரீபு அகஸ்தியர் குழம்பு என்பது பற்றியும் தோழர் தமிழ்த்தி ராஜாங்கம் சண்டமிருதம் என்பது பற்றியும், டாக்டர் தோழர் என். ராமனுஜம் ஆஸ்துமாவும், சிகிச்சையும் என்பதுபற்றியும் மற்றும்பல வைத்தியர்களும் பேசினர்.

செயலாளரால் கொண்டுவரப்பட்டபல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. தலைவர் முடிவுரையில் ஆங்கிலவைத்யம், இந்தியவைத்தியம் 2ன், கூட்டுவைத்தியம் என்பதுபற்றி விரிவாகப்பேசியபின், தோழர் ஆர். எஸ். மணி நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

### கூட்டுறவு கம்பெனி

ஈரோடு, மே 9—

ஈரோடு பீடித் தொழிலாளர்களால், சங்குமார்க் கூட்டுறவு பீடிக்கம்பெனி ஆரம்பவிழா, 5—5—50ல் சங்கத்தில் தோழர் வி. முத்துக்கிருஷ்ணன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

தோழர் கே. யூ. கிருஷ்ணன் திறப்பு விழாச்செய்து, பீடித் தொழிலாளர்கள் அல்லல்களில் இருந்து மீள, கூட்டுறவு முறை நல்ல சாதனமாக அமைகிறது. தொழிலாளிகள், ஒத்துமையுடனும், கட்டுப்பாடாகவும் நடந்து கொள்ளக் கேட்டுக்கொண்டார். மேதினத்தின் சரித்திரச்சான்றுகளை விளக்கி தோழர்கள் மதார்ஷா மைதீன் பாஷா, கலிபுல்லா, வாஷா ஆகியோர் பேசினர், தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் கே. ராமசாமி நன்றிகூற விழா சிறப்பாக முடிவுற்றது.

### விவசாயிகள் சங்கம்

வாணியம்பாடி, மே. 10—

தோழர் சண்முகம் தலைமையில், திருப்பத்தூர் தாலுகா விவசாயிகள் சங்க வருடாந்திரக் கூட்டம்கூடி, இவ்வாண்டுக்கு கீழ்கண்ட செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தது.

தலைவர்:—வடிவேலு, பொருளாளர்:—ஆர். வி. சண்முகம், செயலாளர் சென்னிராசன், துணைச் செயலாளர்கள்:—வி. என். தத்தப்பன், ஏ. டி. நடராசன், தவிர பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு, ஏகமனதாக நிறைவேறியது. தோழர் தத்தப்பன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

### அம்பேத்கார் விழா

ராணிப்பேட்டை, மே 9—

7-5-50 மாலை மேல்வாரைகாட்டன் பஜார் அம்பேத்கார் மாணவர் சங்கத்தின் சார்பில், தோழர் அம்பேத்கார் பிறந்தநாளையும், புத்தர் பிறந்தநாளையும் தோழர் ஆர். டி. எஸ். மூர்த்தி அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

தோழர் என். கே. பங்காருனாவலர் அம்பேத்கார் வாழ்க்கைப் பற்றியும், தோழர் மகாதேவன் நமது மக்களின் சீர்கேட்டைப்பற்றியும், தோழர் கே.பி. ஆறுமுகம் நல்லொழுக்கக்கட்டணத்தைவாசித்தார். தோழர்கே.எம்.நாராயணசாமிமாணவர்களின் கடமையைப்பற்றிப் பேசினார். தலைவர் தம் முடிவுரையில் நமது ஒத்துமையைப்பற்றியும், மாணவர்கள் எதிர்காலத்தில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பனப்பற்றியும் பேசி முடித்தார். தோழர் பச்சைமுத்து நன்றிகூற கூட்டம் கலைந்தது. சிறுவர் சிறுமிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

### அழகிரி படிப்பகம்

வில்லுக்குறி, மே 9—

நாகர்கோயில் அடுத்த நிவ்வூரில் 8—5—50 அன்று "அழகிரிசாமி வாசிப்புசாலை" ஒன்று திறக்கப்பட்டது.

### மறுமலர்ச்சி நடிகர் மன்றம்

பம்பாய், மே 10—

ஈ. நா. ஆ. ம. சங்க ஆண்டுவிழாக்காக பம்பாய் மறுமலர்ச்சி நடிகர் மன்றத்தாரால் தோழர் ஜீவா எழுதிய "உயிரோவியம்" என்னும் தமிழ்இலக்கியநாடகத்தை 9-5-50ல் பொதுமக்கள் விரும்பத்தக்கமுறையில் மிகச் சிறப்புடன் நடத்திக் காண்பிக்கப்பட்டது. தோழர் எம். எஸ். குமரேசன் அவர்களும், தோழர் எம். எம். மாரியப்பா அவர்களும் மேடைக்குவந்து தங்கள் இன்னிசை விருந்தால் மக்களை மகிழ்வித்தனர்.

### கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம்

சங்கரநயினார்கோவில், மே 14—

இந்நகர் திருவேங்கடம்சாலைத் தெரு (வள்ளுவர் திடலில்) கைத்தறி நெசவாளர் சங்கத்தின் சார்பாக, தோழர் மா. சங்கரசுப்பு முதலியார் தலைமையின் கீழ் 11—5—50 அன்று ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் க. நவாஸ், பி. வயிரவ முதலியார் கைத்தறியாளர்களின் நிலைமையும் நூல் கிடைக்காத துன்பமும்பற்றி விரிவாகப் பேசினார்கள்.

கடைசியாகத் தோழர் ச. சுப்ரமணியம் ஆட்சியாளர் போக்கையும் நம் வேலைகளுக்கு இடைஞ்சல்பல செய்துவரும் சிலமந்த புத்தியினரையும் கண்டித்துப் பேசினர்.

### உப்புத் தொழிலாளர் சங்கம்

தூத்துக்குடி, மே 10—

9—5—50 மாலை விவிஞ்சிபுரம் உப்புத்தொழிலாளர் மைதானத்தில், உப்புத் தொழிலாளர் பொதுக் கூட்டம் தோழர் ராமன் வாத்தியார் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் தொழிலாளர்களை அதிக நேரம் வேலை வாங்குவதைக் கண்டித்தும் பெண் தொழிலாளர்களை இம்சிப்பதைக் கண்டித்தும் தொழிலாளர்கள் லஞ்சம் கொடுப்பதைப் பற்றிக் கண்டித்தும் பேசிவிட்டு தொழிலாளர்கள் காலை 8-மணி முதல் பகல் 12-மணி வரையிலும், பிற்பகல் 1-மணி முதல் மாலை 5 மணி வரையிலும் வேலை செய்வதென ஒப்புக்கொண்டு கூட்டம் இரவு 9 மணிக்கு முடிந்தது.

---

## தொழிற்சாலைகள் மூடுவிழா

ரோம், மே. 16—

யுத்தம் முடிந்தது முதல் நஷ்டத்தில் வேலை செய்து வந்த 4 எஃகு தொழிற்சாலைக்குகொடுத்து வந்த பணஉதவியை நிறுத்திவிடுவதென்று இதாலிய சர்க்கார் தீர்மானித்து விட்டதால் இவைகள் மூடப்படும் என்று தெரிகிறது. இதனால் 31060 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவர்.

### ரோமர்கள் உபயோகித்த மட்பாண்டங்கள்

அம்மான், மே. 16—

ஜெருசலத்தில் 'ஹிராட் கேட்' என்ற இடத்தில் இரண்டாவது (கி. பி.) நூற்றாண்டில் ரோமர்கள் உபயோகித்ததாக கருதப்படும் மண்பாண்டங்கள் அகப்பட்டிருக்கின்றன. இவை பாலஸ்தீன மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

## கரடிமீது கார் மோதியது

பாரிஸ், மே. 16—

பிரெஞ்சு பார்லிமெண்ட் மெம்பர் மார்க் பிரஸ்லட் பாரிஸுக்கு 20 மைலுக்கு அப்பால் காரில் சென்றுகொண்டிருக்கையில், ஒரு கரடிமீது மோதி கார் விபத்துக்குள்ளாயிற்று.

கரடி ஸ்தலத்திலேயே இறந்தது கார் தலை குப்புற கவிழ்ந்துவிட்டது. பிரஸ்லட் காயமின்றித் தப்பினர்.

---

விவசாயம்:

## சென்னை நீர்ப்பாசன தேவைகள்

சென்னையில், 1950 ஏப்ரல் 15-ந் தேதியுடன் முடிவுற்ற மாதத்தில் 282 கிணறுகள் கட்டி முடிந்தன; மேற்கொண்டு 908 கிணறுகளைக் கட்டி முடிப்பதற்காக 6,12,130 ரூபாயுள்ள தொகை வழங்கப்பட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் 1950 பிப்ரவரி முடிவுக்குள் 2,300 கிணறுகள் வேலை முடிந்திருக்கின்றன; 3000 கிணறுகள் சம்பந்தமான வேலை நடந்தேறி வருகிறது. பஞ்சாபில் 163 ஊற்றுக் கிணறுகள் 1950 பிப்ரவரியில் அமைக்கப்பட்டிருக்கின்றன; 927 கிணறுகள் சம்பந்தமாய் வேலை நடந்து வருகிறது. ஒரிசாவில், 1950 ஏப்ரல் 15-ந் தேதியுடன் முடிவுற்ற அரை மாதத்தில் 1 77 லட்சம் ரூபாய் கொண்ட தொகை சிறிய நீர்ப்பாசனங்களின் பொருட்டுச் செலவிடப்பட்டிருக்கிறது; இத்துடன் மொத்தம் இதுவரையில் 5·97 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ராஜஸ்தானத்தில், 1950 ஏப்ரல் 15உ யுடன் முடிவுற்ற மாதத்தில் 155 புதிய கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன; 135 கிணறுகள் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் 12 பம்புக் குழாய்களும், 9 பாவிச் சக்கர யந்திரங்களும் (பெர்சியன் வீல்ஸ்) அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கு வங்காளத்தில், 1950 ஏப்ரல் 15 தேதியுடன் முடிவுற்ற அரை மாதத்தில் 134 நீர்ப்பாசன வேலைகள் பூர்த்தியடைந்திருக்கின்றன. 74 திட்டங்கள் நடந்தேறிவருகின்றன. அதே காலஅளவில் சென்னை சிறியநீர்ப்பாசனத் திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றன; 44 திட்டங்கள் நடந்து வருகின்றன. மத்திய பாரத்தில் 1950 மார்ச் 31உ யுடன் முடிவுற்ற அரை மாதத்தில் 40 கிணறுகள் சம்பந்தமாகப் பழுது பார்ப்பு வேலை அல்லது புதிய கட்டுமான வேலை தொடங்கப்பட்டது. ஐந்து புதிய பம்புக் குழாய்கள் அமைக்கப்பட்டன. மைசூரில், 1950 மார்ச் 31உ யுடன் முடிவுற்ற அரை மாதத்தில் 30 நீர்ப்பாசனக் கிணறுகள் வேலை முடிந்தன. குளங்களில் நீர்மட்டம் குறைந்துவிட்ட இடங்களில் நீர் இறைப்பதற்காக வைக்கும்பொருட்டு 40 டீசல் யந்திரங்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டன.

### சாகுபடிக்கு இன்னும் அதிக நிலம்

சென்னையில், மார்ச் 15உ ஏப்ரல் 15உ மாதத்தில் 2,070 ஏகரா நிலம் புதிதாய் உழவுக்கு வந்திருக்கிறது. 162 ஏகரா நிலம் பயிரிட ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது. மைசூரில், 80 ஏகரா புதிதாய் உழவுக்கு வந்திருப்பதுடன் 107 ஏகரா சதுப்பு நிலம் மீட்கப்பட்டிருக்கிறது

### செயற்கை உரங்கள்

சென்னை ராஜ்யத்தில் 1950 ஜனவரி இறுதி வரையில் 95,723 டன் குப்பை உரம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது; 1949—50—ம் வருஷத்துக்கு 1·5 லட்சம் டன் குப்பை உரம் விநியோகிக்கவேண்டுமென்பது எல்லையாக வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் 1950 மார்ச் 31-ந் தேதியுடன் முடிவுற்ற அரைமாதத்தில் 1.340 டன் ரசாயன உரமும் 1,878 டன் கிராமக் குப்பை உரமும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாபில், 36,252 குழிகள் தோண்டப்பட்டு 74,96,6[illegible]0 கன அடி குப்பை உரம் மக்க வைக்கப்பட்டிருக்கிறது. பீகாரில், 787 டன் ரசாயன உரமும், 51,634 மணங்கு பிண்ணாக்கும் 1950 மார்ச் 15 வுடன் முடிவுற்ற அரை மாதத்தில் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. இத்துடன், அவைகளின் மொத்த அளவு முறையே 15,871 டன்னும், 4,69,846 மணங்குமாக ஆகிவிட்டிருக்கிறது. மத்திய பாரத்தில் 18,000 குப்பை உரக்குண்டுகள் இதுவரையில் தோண்டப்பட்டிருக்கின்றது. திருவாங்கூரிலும், கொச்சியிலுமாக 1950 ஏப்ரல் 15-ந் தேதியுடன் முடிவுற்ற அரை மாதத்தில் 413 டன் குப்பை உரம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் அதே மாதத்தில், 947 குப்பை உரக்குண்டுகள் தோண்டப்பட்டிருக்கின்றது; 3,4[illegible]8 கரக் குப்பை உரம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

---


## சென்னை வி. பி. ஹாலில்
## 20-5-50 சனி மாலை 6-மணிக்கு
## தி.மு. கழகக் கட்டிட நிதிக்காக

சென்னை முன்னேற்ற நாடகக் கழகத்தார்

(சி. என். ஏ. எழுதிய)

'வழக்குவாபஸ்' 'கல்சுமந்த கசடர்'

(வ. ரா. எழுதிய) 'அகல்யா'

நாடகங்களை நடத்துவர்

தோழர்கள் காஞ்சி. மணிமொழியார், க. அன்பழகன், என். வி. நடராசன், வி. முனுசாமி, கே. ஏ. மதியழகன், கே. எம். கண்ணபிரான், பி. வி. முத்துசாமி, கே. டி. பழனியப்பா, சி.வி.ராஜன், டாக்டர்கணேசன், அரங்கண்ணல், கே ராஜகோபால், ஆர். எம். சாமி, கோ. இறைமுடிமணி. மற்றும்பல தோழர்களும் நடிப்பர்.

கட்டணம்:—ரு. 3. 2, 1. (வரியுட்பட)

கே. கோவிந்தசாமி,
டி. எம். பார்த்தசாரதி,
அமைப்பாளர்கள்.

டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:-
'மாலை மணி' அலுவலகம் சென்னை-1.



மதுரை மாவட்ட

## தி. மு. க. முதல் மாநாடு

11-6-50 ஞாயிறன்று சோழவந்தான்
"செல்வம் பந்தலில்" நடைபெறும்

தலைவ[illegible] வெ. கி. சம்பத்

துவக்குபவர்:-கே. கே. நீலமேகம்

பொதுச் செயலாளர் தோழர் சி. என். ஏ. அவர்களும், மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்வர்.

இரவு சி. என். ஏ., கே. ஆர். ஆர்., மற்றும் பலர் நடிக்கும்

"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்

செயலாளர்கள், என் முத்து, என். முத்து.

தா. ஆவுடையப்பன் வரவேற்புக் தலைவர்.

எம். அய்யாசாமி, விளம்பர உறுப்பினர்.

தற்போதைய மாநாட்டு அலுவலகம்:—
324, அழகரடி, மதுரை.


### ருத்காமாவுக்கு பெண் மகவு பிறந்தது

செரோவ், மே. 15—

தோழர் செரட்கோமாவின் ஆங்கில மனைவி, தோழியர் ருத்காமா இன்று ஒரு பெண் மகவை ஈன்றனள். அவரது கணவன் தன் மனைவியை காண அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறார்.


### ஏஜண்டு தேவை!

திருச்சியில் நமது "மாலை மணி"யை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொருப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
"மாலைமணி"


### ஆயுத உற்பத்தி அதிகரிப்பு

ரஷ்யாவில் ஆயுத உற்பத்தி அதிவேகமாக அதிகரிக்கப்பட்டு வருவதாக ரஷ்யாவிலிருந்து திரும்பிய ஜெர்மானியர்கள் கூறுகின்றனர்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, Muthu Mar-Chetty Street Madras-1.